திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம், குடிநீர்ப் பிரச்சினையில் சிக்குண்டு தவிப்பது குறித்து நான் இந்த அவையிலே எடுத்து வைத்ததை ஏற்று, பெரம்பலூர், வேலூர் மாவட்டங்களுக்கு ரூ.29 கோடி வளர்ச்சி நிதிக்காக C.R.F.-லே நீங்கள் பணத்தை ஒதுக்கி இருக்கிறீர்கள்.

பிற்பகல் 1-10

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு 1,500 கோடி ரூபாயில் நிறைவேற்றினால்தான் நாங்கள் தண்ணீரே குடிக்க முடியும் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எம்.எல்.ஏ. காலனி குறித்தும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். கோரிக்கையை நான் வைத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெங்களூர், ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ. காலனியைப்போல ஏன் தமிழகத்திலும் ஒரு எம்.எல்.ஏ. காலனியை உருவாக்கக்கூடாது? அதற்கு ஒரு விடையை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இப்போதே அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிவுற்றது.

5. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006-2007, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006-2007 ஆம் ஆண்டின் கூடுதல் மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

2007 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2006-2007."

6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006-2007 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2006-2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-3-2007 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2006-2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.